Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 221 | செவ்வாய்க்கிழமை 05 ஜூலை 2022 | ஆனி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50



## முற்போக்குக் கட்சிகளுடன் இணைந்து

# நாட்டை மீளக்கட்டியெழுப்பி மக்களின் மூச்சை மீட்போம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபதம்

கொழும்பு, ஜூலை 5

முற்போக்குக் கட்சிகளுடன் இணைந்து, பன்முகப்படுத்தப்பட்ட யோசனைகளை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எதிர்க்கட்சியின் நோக்கமாகும். அந்த நிகழ்ச்சி நிரலின் ஊடாக நாட்டு மக்கள் இழந்த மூச்சை மீண்டும் வழங்க முடியும் என்று

15

## அத்துமீறிய மீன்பிடி

# இந்திய மீனவர்கள் மேலும் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 5

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் ஐந்து பேர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் வைத்து நேற்று மாலை அவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான ஐந்து பேரும் மயிலிட்டி துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ-ம)

## ரயில் மோதி ஒருவர் பலி!

வவுனியா, ஜூலை 5

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த ருக்சன் (வயது -33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கிச் சென்ற ரயில், வவுனியா - செட்டிகுளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோதே மேற்படி விபத்து இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த நபர் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட

15

## யாழில் எரிபொருள் பங்கீடு

# பொதுமக்களுக்கு 72% அலுவலர்களுக்கு 28%

### மேலதிக மாவட்டச் செயலர் காத்திரம்



யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தின்போது பொதுமக்களுக்கு 72 வீதத்தையும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கு 28 வீதத்தையும் ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15




"சுயநிர்ணய உரிமை கேட்ட காலம் மலையேறி இப்ப பெற்றோல் அடிக்கிறதில ஆருக்கு உரிமை எண்டு அடிபடுற அளவுக்கு வந்து நிக்கிறம் கண்டியளோ..."

## இன்று கரும்புலிகள் நாள்!

### தாக்குதல் நடைபெறலாமாம் பொலிஸ்மா அதிபர் கடிதம்




யாழ்ப்பாணம், ஜூலை 5

இன்று கரும்புலிகள் தினமாகும். இன்றைய நாளில் தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புள்ளதால் நாட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பாதுகாப்புச் செயலாளருக்கு பொலிஸ்மா அதிபர் கடிதம் அனுப்பியுள்ளார்.

15

## எரிபொருள் விநியோகம்; எவருக்கு முன்னுரிமை?

### அறிக்கை தயாரிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 5

எரிபொருள் கொள்வனவு மற்றும் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படும் துறைகள் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறும் அதை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் சட்டமா அதிபருக்கு உச்சநீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

15

## சுரண்டல்களின் விளைவால் யாசகம் எடுக்கிறது நாடு!

### யாழ். ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

இந்து சமுத்திரத்தின் முத்து என்று சொல்லப்பட்ட எமது நாடு, இன்று யாசகம் எடுக்கின்ற நாடாக மாறியுள்ளது. 74 ஆண்டுகளாக இடம்பெற்று வந்த மிகப்பெரிய சுரண்டல்களின் விளைவை தற்போது நாம் அனுபவிக்கின்றோம் - இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தின் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

15

## தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்த பெண் குழந்தை உயிரிழப்பு!

### பொன்னாலையில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

பொன்னாலை மேற்குப் பகுதியில் யசோதரன் யஸ்மிகா என்ற ஒன்றரை வயதுப் பெண் குழந்தை தண்ணீர்

15

## அரச அலுவலர்களுக்கு

# மூன்று வருடங்களுக்கு ஊதிய உயர்வில்லை!

### நாணய நிதியம் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 5

அரச அலுவலர்களுக்கு எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு

15

## தென்னிலங்கையைச் சேர்ந்த

# போதை வியாபாரி கொக்கிளாயில் கைது!

முல்லைத்தீவு, ஜூலை 5

முல்லைத்தீவு - கொக்கிளாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் போதைப் பொருளை வைத்திருந்த, விற்பனை செய்த தென்னிலங்கை நபரொருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்றுக்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு குண்டுத்தாக்குதலுக்குத் திட்டம்?

## பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு கடிதம் அனுப்பினாராம் பொலிஸ்மா அதிபர்



**கொழும்பு, ஜூலை 5**

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கரும்புலிகள் நாள் இன்றாகும். இதனையொட்டி இன்று அல்லது நாளை குண்டுத்தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு கடிதம் அனுப்பி யுள்ளதாகவும் அது தொடர்பான தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு எழுதிய கடிதத்தின் பிரகாரம் சர்வதேச உளவு நிறுவனங்களின் பங்களிப்புடன் கரும்புலிகள் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னிட்டு இன்று அல்லது நாளை இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்குபற்றவேண்டாம் என வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை இந்த ஆவணம் எச்சரிக்கின்றது.

இந்தத் தகவல்கள் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும், அப்படித் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதா என்பதையும் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

தற்போது நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களையும் உணர்வுகளையும் நசுக்கவே இவ்வாறான செய்திகள் பகிரப்படுகின்றதா என்ற சந்தேகம் இருக்கின்றது - என்றார். (ஒ-இ)

## கிளி. கிராம அலுவலர்களுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை

**கிளிநொச்சி, ஜூலை 5**

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச்செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிராம அலுவலர்களுக்கும் மாவட்டச்செயலருக்கும் இடையில் மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடமைக்குச் செல்வதற்கு தமக்கு எரிபொருள் இல்லாமையால் கடமையாற்ற முடியாத நிலையில் உள்ளதாக கிராம அலுவலர்கள் மாவட்டச் செயலரிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்தே மாவட்டத்துக்குக் கிடைக்கும் எரிபொருளுக்கு அமைய கிராம அலுவலர்களுக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை முன்னெடுப்பதாக மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ஒ-14,113)



யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் திறன் வகுப்பறை திறப்பு விழா பாடசாலை அதிபர் செல்வி சா. மாணிக்கம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக மருத்துவர் சபாலிங்கம் ஜோதிலிங்கம், திருமதி இராஜேஸ்வரி ஜோதிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நாகலிங்கம் சிவநேசன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஒ-10)

## தபால் தொழிற்சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு நிறைவு

**கொழும்பு, ஜூலை 5**

தபால் தொழிற்சங்கப் பணியாளர்களால் கடந்த ஜூன் மாதம் 28 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்பு நேற்று கைவிடப்பட்டது.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து, பணிப்புறக்கணிப்பு நிறைவுபெற்றது.

நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக வாரத்தில் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய 3 நாள்களில் மாத்திரம் அஞ்சல் நிலையங்கள் ஊடாக சேவைகளை முன்னெடுக்க அஞ்சல் திணைக்களம் கடந்த வாரம் தீர்மானம் மேற்கொண்டிருந்தது. தீர்மானத்தின் ஊடாக சனிக்கிழமை பணியாற்றுவதன் மூலம் தமக்குக் கிடைத்து வந்த மேலதிக கொடுப்பனவு இல்லாது போவதாகத் தெரிவித்து தபால் அலுவலகப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14,இ)

# இடர்நிலையை அறிவித்து அதிகாரியை நியமிக்குக!

## நிர்வாக சேவை சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 5**

தேசிய இடர் நிலையை பிரகடனம் செய்ய வேண்டும் என்றும், அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு உரிய அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் இலங்கை நிர்வாக சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் நிலைமைகளை சாதாரண முகாமைத்துவம் செய்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக உயிர் அச்சுறுத்தல்களை கருத்திற் கொள்ளாது பணியாற்றி வரும் அரசாங்க ஊழியர்கள் எதிர்நோக்கும் நெருக்குதல்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்யாமை தொடர்பில் எதிர்ப்பைப் பதிவு செய்கின்றோம்.

மாத்தறை பிரதேசசெயலாளருக்கு நெருக்கடி ஏற்படுத்திய மாத்தறை மருத்துவமனையின் பணியாளர்களுக்கு எதிராகவும் மற்றும் வடமத்திய மாகாண ஆளுநரின் செயலாளரது பணிகளுக்கு இடையூறு விளைவித்த குருணாகல் மாநகர முதல்வர் ஆகியோருக்கு எதிராகவும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### எரிபொருள் பங்கீட்டில் அநீதி

## யாழ். பல்கலை கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் சங்கம் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு எரிபொருள் பங்கிடப்பட்டபோது, அது உரியமுறையில் நடைபெறவில்லை என்று தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் சரியான தீர்வு வழங்கப்படும் வரையில், தங்களது பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்று கல்வி சாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவை உள்ளீர்ப்புக்கான வயது வரம்பை நீக்க நடவடிக்கை



**கொழும்பு, ஜூலை 5**

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளை, ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கும்போது தடையாக உள்ள வயது வரம்புத் தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதியளித்துள்ளார்.**

நாடாளுமன்றில் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களில் பலர், ஆசிரியர் சேவையில் இணைந்து கொள்ள விருப்பம் வெளியிட்டுள்ளனர் அரச சேவையாளர்களின் நியமன வயது வரம்பு 45 ஆக உள்ளது. எனினும் ஆசிரியர் சேவைக்கான நியமங்களின்படி, 35 வயதுக்கு உட்பட்டவர்களே சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த வயது வரம்புக்கு அப்பாற்பட்ட, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்காக நியமனங்களை மாற்றியமைக்க அரசாங்கம் தயாராக உள்ளது. எனினும் இந்த விடயத்துக்கு தொழிற்சங்கங்களின் இணக்கங்களைப் பெறவேண்டியுள்ளது. தொழிற்சங்கங்களின் இணக்கம் ஏற்பட்டால், இந்த விடயத்தில் தீர்வை எட்ட முடியும். நடப்பு பிரச்சினைகளுக்கு மத்தியில், முதலாம் வகுப்புக்கு மாணவர்களை இணைக்கும் திகதியை நீடிக்க முடியும் - என்றார். (எ-இ)



## தீ விபத்தில் காயமடைந்த சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 5

ஹோமாகம, மாகம்மன பிரதேசத்தில் கடந்த 25 ஆம் திகதி இரவு இரண்டு மாடி வீடொன்றின் ஏற்பட்ட தீ விபத்தில் தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆறு வயது சிறுமி நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தில் சிறுமியின் தந்தை அதே நாளில் உயிரிழந்ததுடன் தாய் மறுநாளும் மற்றும் மூத்த சகோதரி சம்பவம் நடந்த மூன்று நாள்களுக்குப் பின்னரும் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த ஆறு வயது சிறுமி லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (எ-இ)

## யாழ். ஆயரைச் சந்தித்த யாழ். கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூலை 5



யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சந்தன விஜய சுந்த ஜால்மர், யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் அனைத்துவிதமான ஒத்துழைப்பையும் இராணுவத்தினர் வழங்குவர் என்று, யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதி யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயரிடம் தெரிவித்தார். (எ-26)

## எரிபொருள் விநியோகத்தை மேலும் அதிகரித்தது ஐ.ஓ.சி.

கொழும்பு, ஜூலை 5

எரிபொருள் விநியோகத்தை லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் மேலும் அதிகரித்துள்ளது. இதன்படி நேற்றுமுன்தினம் ஒரு மில்லியன் லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டதாக ஐ.ஓ.சி. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்தார்.

கொழும்புக்குத் தேவையான எரிபொருள், கனிய எண்ணெய் கோரிக்கை களஞ்சிய முனையத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.ஆர்.டபிள்யு சொய்ஸாவால் ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-14,இ)

## அத்தியாவசிய சேவைக்கு மீண்டும் வர்த்தமானி

கொழும்பு, ஜூலை 5

மின், பெற்றோலிய விநியோகம், மருத்துவ சேவை என்பன அத்தியாவசிய சேவைகளாகும் என பிரகடனப்படுத்தப்பட்ட அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அந்த சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மின்சாரம் வழங்கல் தொடர்பான அனைத்து சேவைகளும் - பெற்றோலிய பொருள்கள் மற்றும் எரிபொருளின் வழங்கல் அல்லது விநியோகம் - மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள், நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பராமரிப்பு, உணவு மற்றும் சிகிச்சை தொடர்பாக தேவைப்படும் சேவைகள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்கள், வேலை அல்லது உழைப்பு அத்தியாவசிய சேவைகளுக்குள் அடங்குகின்றன.

இவற்றில் சில சேவைகளை அத்தியாவசிய சேவைகள் என பெயரிட்டு அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் கடந்த 20ஆம் திகதியும் வெளியிடப்பட்டது. (ஒ-இ)



## புதினம் தெரியுமோ?

**'எங்களைப் பொதுமக்கள் பெற்றோல் செற்றுகளில கண்டபடி தரக்குறைவாப் பேசுகினம்' எண்டது இப்ப பெற்றோல் செற்றுகளில, முன்னுரிமை அடிப்படையில பெற்றோல் நிரப்பிற அத்தியாவசியப் பணியாளர்கள் கனபேரின்ர ஆதங்கம். ஆனால் முதல்ல அவை சரியா நடக்கினமோ? அவை மற்றவையை மதிக்கினமோ? எண்டதும் இப்ப கேள்விக்குறிதான்.**

இப்பிடித்தான் அண்டைக்கு ஒருநாள் கொக்குவில் பக்கமா உள்ள செற்றில சுகாதாரத்துறையில உள்ளவைக்கு பெற்றோல் அடிக்க ஏற்பாடு செய்தவை. எல்லாருக்கும் பெற்றோல் அடிக்கோணும் எண்டதுக்காக, அங்க இருக்கிற பெற்றோலின்ர அளவைக் கணக்கிட்டு அதுக்கேத்தபடி ஒரு மோட்டார் சைக்கிளுக்கு 1,500 ரூபாவுக்கும், கார்களுக்கு 3,000 ரூபாவுக்கும் தான் அடிக்கலாம் எண்டு அந்தப் பகுதிக்கு பொறுப்பான பிரதேச செயலர் உத்தரவு போட்டு, அதுக்கேத்தபடி ரோக்கனும் குடுபடத் தொடங்கிட்டுது. அந்தப் பிரதேச செயலர் ஓடர் போட்டபடி நடந்திருந்தால் எல்லாம் ஓக்கே. ஆனால், அங்க சுகாதாரத்துறைக்கு பொறுப்பான ஒரு டொக்டர் வந்து, 'இப்பிடி நீங்கள் சொல்லிற மாதிரி அடிக்க ஏலாது. எங்களுக்குக் கூட அடிக்க வேணும். எவ்வளவு அடிக்கோணும், ஆர் அடிக்கோணும் எண்டதை நாங்கள் பாக்கிறம். நீங்கள் இதில தலையிட வேண்டாம்' எண்டு அந்தப் பிரதேச செயலரை அவ்வளவு ஆக்களுக்கு முன்னால கண்டபடி பேசிப்போட்டு, தாங்கள் அங்க பெற்றோல் கியூவை ஒழுங்குபடுத்தி, அங்க நிண்ட சுகாதாரத்துறைப் பணியாளர்களுக்கு பெற்றோல் குடுக்கத் தொடங்கிட்டினம்.

இனியும் அங்க நிண்டால் தனக்கு மரியாதை இல்லை எண்டிட்டு பிரதேச செயலரும் அங்க இருந்து வெளிக்கிட்டுட்டா. இப்பிடி அந்தப் பிரதேச செயலரிட்ட இருந்து, அடாத்தா அந்தப் பெற்றோல் செற்றை தங்கட கட்டுப்பாட்டுக்க கொண்டந்தவை ஒழுங்கா நடந்திச்சினமோ எண்டால் அதுவுமில்லை. காருக்கு 6,000 ரூபாவுக்கும், மோட்டார் சைக்கிளுக்கு 3,000 ரூபாவுக்கும் அடிக்கிறதெண்டு முடிவெடுத்திச்சினம். ஆனால் சில கார்களுக்கும், மோட்டார் சைக்கிள்களுக்கும் அதைவிட கூடத் தொகையில பெற்றோல் அடிபட்டிருக்கு. சிலர் ஒரே நேரத்தில தங்கட காரையும், மோட்டார் சைக்கிளையும் கொண்டந்து பெற்றோல் அடிச்ச கூத்தெல்லாம் அங்க நடந்திச்சு. இப்பிடி இருக்கிற பெற்றோலை தாங்கள் கொஞ்சப்பேர் உறிஞ்சி இழுத்தது பத்தாதெண்டு, தங்களுக்கு தெரிஞ்ச ஆக்களையும் (சுகாதாரத்துறையில வேலையே செய்யாதவையை) கியூவுக்குள்ள செருகி, அவைக்கும் பெற்றோல் அடிச்சிருக்கினம்.

இப்பிடியெல்லாம் குழப்பியடிச்சு, பெற்றோலும் அடிச்சிட்டு எல்லாரும் தங்கட பாட்டில போட்டினம். ஆனால் சுகாதாரத்துறையில வேலைசெய்யிற கனபேர், இப்பிடி முறையில்லாத விநியோகத்தால அண்டைக்கு பெற்றோல் அடிக்க முடியாமல் போட்டுது. அதைவிட பெற்றோல் அடிச்சு முடிஞ்சால், முதல் எவ்வளவு இருப்பு இருந்தது? எவ்வளவு குடுபட்டிருக்கு? இப்ப எவ்வளவு இருப்பில இருக்குது? எண்டெல்லாம் பாத்து, உறுதிப்படுத்த வேணும். ஆனால் இவை தங்கட அலுவல் முடிஞ்சவுடன, 'ஆண்டி பின்னுக்கு தட்டினால் பறக்குது சாம்பல்' எண்ட மாதிரி, இதுகள் ஒண்டையும் கவனிக்காமால் போட்டினம். மேல்மட்டக்காரர் அளவுக்கு மீறி பெற்றோல் அடிக்க, கீழ்மட்டத்தில உள்ள சுகாதாரப் பணியாளர்மார் ஒரு துளி பெற்றோலும் இல்லாமல் திரும்பிப்போச்சினமாம். அப்ப இவையளை சனம் பேசுறதுல என்ன பிழை இருக்கு?



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கும் முன்னுரிமையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை

## முல்லை.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூலை 5**

**முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.**

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகின்ற எரிபொருளில் விவசாயிகளுக்கான எரிபொருள் முதன்மையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெல் அறுவடை நடைபெற்று வருகின்றது. தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டால் பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளும் அறுவடைக்குப் போதுமான எரிபொருள் கிடைக்காமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக துறைசார் அமைச்சுக்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் விவசாயிகளுக்கு அறுவடைக்கு எரிபொருளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டாலும் மாவட்டத்துக்கான எரிபொருள் வரவு தற்போது குறைவடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் உட்பட அனைவருக்கும் எரிபொருள் வழங்குவதில் நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

எனினும், மாவட்டத்துக்குக் கிடைக்கப்பெறும் எரிபொருளை முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்றார். (ஒ-14-13)






# எரிபொருள் வழங்குமாறு கோரி நகரசபை ஊழியர்கள் கவனவீர்ப்பு

மன்னார், ஜூலை 5

எரிபொருள் வழங்குமாறு கோரி மன்னார் நகரசபையின் கழிவகற்றும் பணியாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

மன்னார் நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த கழிவகற்றும் நடவடிக்கைகளுக்கு உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமையால் கழிவகற்றும் பணிகள் கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டுள்ளன.

இதனாலேயே கழிவகற்றும் ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார சேவைகளை தரம் தாழ்த்திப் பார்ப்பது ஏன்?" , "பெற்றோல் பங்கீட்டில் உள்ளூராட்சி சேவைகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?", "திண்மக் கழிவகற்றல் சேவை அத்தியாவசிய சேவை என்று தெரியாதா மாவட்டச் செயலரே?" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டப் பகுதிக்கு விரைந்த மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

அதனையடுத்த நகரசபைப் பணியாளர்கள் போராட்டத்தை நிறைவு செய்தனர். (ஒ-14-56)

# மக்களுக்கு சேவை வழங்குவதில் அரச நிறுவனங்களுக்கு சிக்கல்!

## உத்தியோகத்தர்களின் செயற்பாடே காரணம் என்று சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, ஜூலை 5

அலுவலகங்களை அண்மித்த பகுதியில் வசிக்கும் அரச அலுவலர்களும் எரிபொருள் இல்லை என்று தெரிவித்து அலுவலகங்களுக்கு வர மறுப்பதால் பொதுமக்களுக்கு உரிய சேவைகளை வழங்குவதில் நிறுவனத் தலைவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாம் வசிக்கும் இடங்களுக்கு அருகில் உள்ள அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கடமையாற்றும் அலுவலர்கள், தூர இடங்களில் இருந்து கடமைக்கும் வரும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் சலுகைகளைப் பெற விரும்புவதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று நிறுவனத் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அலுவலர்களை சுழற்சி முறையில் பணியாற்றுமாறு அரசினால் பணிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத் தலைவரின் பணிப்புரைக்கமைய கடமைக்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றுவோரில் குறைந்தது 70 வீதமானவர்கள் அலுவலகத்திலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் வசிக்கின்றனர். 30 சதவீதத்தினரே தூர இடங்களில் இருந்து கடமைக்கு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

சேவை நாள்களை மட்டுப்படுத்தி அரச அலுவலர்கள் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட அரசாங்கம் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளபோதும், அந்தச் சந்தர்ப்பமும் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

நிலைமையை உணர்ந்து அரச அலுவலர்கள் கடமைகளுக்குச் சமுகமளித்தால் மக்களுக்கான சேவைகளை உரிய முறையில் வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## எரிபொருள் நெருக்கடி

# மன்னாரில் தொடரும் மறியல் போராட்டம்

எரிபொருள் நெருக்கடியால் மன்னாரில் தொடர்ச்சியாக வீதிமறியல் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் ஐ.ஓ.சி. நிலையத்தில் இந்த வாரம் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட போதிலும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு ரோக்கனும் வழங்கவில்லை. எரிபொருளும் வழங்கவில்லை. இதனால் இந்த வாரம் முழுவதும் காத்திருந்து எரிபொருள் கிடைக்காதவர்கள் ஆவேசமடைந்து எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு வீதிமறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதன்போது எரிபொருள் வழங்காவிட்டாலும் எரிபொருளுக்கான ரோக்கன் வழங்குமாறு மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

[illegible] ருள் வழங்கலில் ஏற்படும் சிக்கலைத் தவிர்ப்பதற்காக கிராம ரீதியாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவித்தார். அதனையடுத்து மக்களுக்கும் அலுவலர்களுக்கும் முரண்பாடு அதிகரித்தது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இருந்தும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் தலைமன்னார் பிரதான வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மன்னார் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு இந்த வாரம் மூன்று தடவைகளில் 19 ஆயிரத்து 800 லீற்றர் எரிபொருள் கிடைத்தது. அதில் 2 ஆயிரத்து 600 பொதுமக்களின் மோட்டார் சைக்கிள்களுக்கும், 905 ஓட்டோக்களுக்கும் 150 கார்களுக்குமாக எரிபொருள் வழங்கப்பட்டது.

[illegible]வேளை 700 அரச உத்தியோகத்தர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா வீதமும் 37 இ.போ.ச. ஊழியர்களுக்கு 750 ரூபா வீதமும் எரிபொருள் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தங்கள் தேவைகளுக்கு மீறி எரிபொருளைப் பெற்று கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விநியோகிக்கும் ஒரு சிலரால், தேவையுடைய மக்களுக்கு தொடர்ச்சியாக எரிபொருள் கிடைக்காமல் பாதிக்கப்படுவதாலே போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கின்றோம் என மக்கள் தெரிவித்தனர். வீதிகளை மறித்துப் போராட்டங்களில் ஈடுபடுவதாலும் அரச அலுவலர்களுடன் முரண்படுவதாலும் தீர்வு கிடைக்கப் போவதில்லை.

எனவே உங்களுடனேயே உங்களுக்குள் வரிசையில் இருந்து எரிபொருளைப் பெற்றுப் பதுக்கும் நபர்களை அடையாளப்படுத்தி பொலிஸாருக்கு அல்லது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினருக்கு அறிவியுங்கள்.

இவ்வாறாயின் எரிபொருளுக்கான நெருக்கடி ஓரளவு குறைவடையும் என அலுவலர்கள் தெரிவித்தனர். (ஒ-14-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உங்களுடைய செயல்கள் நினைத்தபடி நடந்தேறும். உறவினர்களிடம் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். உங்கள் எண்ணம் ஒன்று நிறை வேறும். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**இடபம்:** சுறுசுறுப்பாக செயற்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். யோகமான நாள். அலுவலகத்தில் உங்களின் செல் வாக்கு உயரும். மேலதிகாரிகள் பாராட்டுவர்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். தடைபட்ட முயற்சிகள் இன்று நடந்தேறும். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். அரசியல்வாதிகளின் எண்ணம் நிறைவேறும்.

**கடகம்:** தடைபட்ட வருவாய் வந்து சேரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். பேச்சாற்றலால் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். சமூகத்தில் உங்கள் புகழ் உயரும்.

**சிம்மம்:** திட்டமிட்டு செயற்படுவீர்கள். நெருக்கடிகள் விலகி நிதிநிலை உயரும். பணியிடத்தில் உங்களுடைய ஆலோசனைக்குமதிப்பு ஏற்படும். உங்களது மனமே இன்று உங்களை வழிநடத்தும்.

**கன்னி:** அலுவலகம், தொழில் சம்பந்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். அலைச்சல் அதிகரித்து சோர்வடைவீர்கள் என்றாலும், உங்களது முயற்சி இலாபமாகும். கடன்களை அடைப்பீர்கள்.

**துலாம்:** செயல்களால் வருமானம் காண்பீர்கள். நீங்கள் ஈடுபடும் முயற்சி வெற்றியாகும். நீண்ட நாளாக நிறை வேறாமல் இருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும். யோசித்து செயற்படவும்.

**விருச்சிகம்:** வேலை வாய்ப்புக்காக காத்திருந்தோருக்கு எதிர்பார்த்த நற்செய்தி வரும். வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி அனுகூலத்தை ஏற்படுத்தும்.

**தனுசு:** கடந்த கால அனுபவத்தைக் கொண்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வார்த்தைகளில் கோபம் வேண்டாம். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்தாமல் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள்.

**மகரம்:** ஆவலுடன் நீங்கள் மேற்கொண்ட ஒரு முயற்சி இன்று நிறைவேறாமல் போகும். புதிய முயற்சிகளையும் வெளியூர் பயணங்களையும் தவிர்ப்பது நன்மையாகும்.

**கும்பம்:** நண்பர்களின் ஒத்துழைப்பால் புதிய முயற்சிகள் வெற்றியாகும். பண வரவு கூடும். தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்சினை தீரும். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**மீனம்:** பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். மறைமுக எதிரிகள் பல மிழந்து போவர். சுறுசுறுப்புடன் செயற்படு வீர்கள். மேலதிகாரி கள் பாராட்டுவர். எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

# பொதுமகன் மீது தாக்குதல் அதிகாரி மீது விசாரணை!

**கொழும்பு, ஜூலை 5**

**குருநாகலில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் பொதுநபரைத் தாக்கிய சம்பவம் தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ள நிலையில், அந்த இராணுவ அதிகாரி மீது இராணுவத்தால் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இராணுவத்தைச் சேர்ந்த இருவர் ஒருவரைப் பிடித்து பேசிக் கொண்டிருந்தபோது, படையதிகாரி ஒருவர் அந்த நபரை எட்டி உதைக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது. தாக்குதல் நடத்திய இராணுவ அதிகாரி லெப். கேணல் தரத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவம் உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அதிகாரிகளின் கூற்றுப்படி, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த ஒரு குழு குழப்பி இடையூறு செய்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு அந்தக் குழு இடையூறு விளைவித்தது என்றும், அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு வேண்டுமென்றே எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மையை உருவாக்கி மோதலுக்கு காரணமாக இருந்தது என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் இரண்டு சிவிலியன்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# எரிபொருளுக்காக குழப்பம்: சிப்பாய்க்குக் கத்திக் குத்து!

கொழும்பு, ஜூலை 5

எம்பிலிபிட்டிய பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் இருந்த இராணுவ சிப்பாய் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது.

கதுருகசர பொறியியலாளர் படை முகாமின் இராணுவச் சிப்பாய் ஒருவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எம்பிலிபிட்டிய, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 5 நாள்களுக்குப் பின்னர் நேற்று எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையில், சிறிது நேரத்தில் எரிபொருள் தீர்ந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டதால் கோபமடைந்த மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த இராணுவச் சிப்பாயுடன் இருவர் மோதலில் ஈடுபட்டுள்ளதுடன், அதில் ஒருவர் இராணுவச் சிப்பாயின் கடமை நேர துப்பாக்கியைப் பறித்துச் சென்றுள்ளார். மற்றுமொருவர் கூரிய ஆயுதத்தால் இராணுவச் சிப்பாய் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-இ)

# இரவுபகலாக வரிசையில் நின்றும் அரச அலுவலருக்கே முன்னுரிமை

## ● பொதுமக்கள் கடும் விசனம் ● உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்து

கொடிகாமம், ஜூலை 5

பெற்றோல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து 3 நாள்களாக வரிசையில் காத்திருந்தவர்களுக்கு பெற்றோலை வழங்காது, வரிசையில் காத்திருக்காத அரச அலுவலர்களுக்கு பெற்றோல் வழங்கப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ள முடியாத செயல்.

சாவகச்சேரி, நுணாவிலில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள்நிரப்புநிலையத்தில்வரிசையில் காத்திருந்து ஏமாற்றமடைந்த மக்களே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது-

கடந்த புதன்கிழமையில் இருந்து நாம் வரிசையில் இரவு, பகலாகப் பெற்றோலுக்காகக் காத்திருந்தோம். எந்தவிதக் குழப்பமும் இன்றி ஒழுங்கான முறையில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெற்றோல் கிடைத்தது. வரிசைகளில் 3 நாள்களாகக் காத்திருந்தவர்களில் 316 பேருக்கு மட்டுமே ரோக்கன் வழங்கப்பட்டது. ஏனையோருக்கு வழங்கப்படவில்லை. அதேநேரம், தென்மராட்சிப் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் ஒள்றை மாவட்டச் செயலரின் அனுமதியுடன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அனுப்பியிருந்தார். வரிசையில் நின்ற மக்களுக்கு பெற்றோல் வழங்கப்பட முன்னர் அவர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களுக்கு சாவகச்சேரி எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் நிரப்புவதற்காக சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தால் ரோக்கன் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வழங்கப்பட்டது. இந்தநிலையில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் அவர்களுக்குப் பெற்றோல் வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட அளவினருக்கே பெற்றோல் வழங்குவோம் என்று தெரிவித்திருந்தால் 3 நாள்களாக எரிபொருள் வரிசையில் காத்திருக்க வேண்டி நேர்ந்திராது. அனைவருக்கும் பெற்றோல் வழங்குவோம் என்றே கூறியிருந்தனர். அரச உத்தியோகத்தர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்கும், ஏனைய பொதுமக்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கும் பெற்றோல் வழங்கினர். ஏன் இந்தப் பாகுபாடு?. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கண்காணிப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், தமது செயலக உத்தியோகத்தர்கள் பெற்றோலைப் பெறுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கின்றனரே தவிர வேறு எதுவும் செய்வதாகத் தெரியவில்லை.

எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதால் மக்களுக்கு ஏற்படும் வருமான இழப்புக்களைப் பற்றியோ, அதனால் ஏற்படும் நெருக்கடிகளைப் பற்றியோ எவரும் சிந்திப்பதாக இல்லை.

தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தனியாருக்கு எரிபொருள் வழங்கவும், அரச உத்தியோகத்தர்களுக்கு ப.நோ.கூ.சங்க நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்கவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எரிபொருள் நிரப்பும் பம்பிகளுக்கு அருகில் ஏன் இராணுவத்தினர் தங்கள் வாகனங்களை நிறுத்துகின்றனர்? அவற்றின் மறைவில் கான்களில் எரிபொருள் நிரப்பிச் செல்கின்றனர். இங்கு வேலியே பயிரை மேய்ந்த கதையே நடக்கின்றது.

இவை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பொது மக்கள் தெரிவித்தனர்.

(எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிகளில் இருப்பவர்களே உதவி தடைப்பட காரணம்!

## ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 5**

**அமெரிக்க டொலரை அள்ளிக் கொடுக்கப் பல அரபு நாடுகள் தயாராகவே இருக்கின்றன. ஆனால் எமது நாட்டில் உள்ள தலைமைத்துவங்களுக்கு உதவி செய்ய அவர்கள் தயாராக இல்லை. ஒருவருடைய பதவியை விடவும் நாட்டில் வாழும் இரண்டு கோடி மக்களின் வாழ்வு, எதிர்காலம் என்பவையே முக்கியம்.**

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;- கடனுக்கு மேல் கடன், கடனுக்கு வட்டி வேறு. இந்திய அரசு பெற்றோலை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்து 40 வீத இலாபத்தை வைத்து நமது நாட்டுக்கு தருகிறார்கள். உதாரணமாக 500 மில்லியன் டொலரைத் தந்துவிட்டு ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரம் மில்லியன் டொலர் பெறுமதியான இலங்கையின் சொத்தை எழுதி வாங்கிக்கொள்கிறார்கள்.

இந்த அரசாங்கம் ஆட்சியிலிருக்கும் ஒவ்வொரு நாளும் எமது நாடு பயங்கரமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது நாங்கள் அனுபவித்துக்கொண்டிருப்பதல்ல கஷ்டம். இனித்தான் நாம் அதிக கஷ்டங்களை அனுபவிக்கப் போகின்றோம். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு இந்த அரசாங்கம் தொடர்ந்தால் விளைவு மிகமோசமாக இருக்கும்.

இந்த அரசாங்கம் நாட்டின் நிலையை கருத்தில் கொண்டு உடனடியாக பதவிகளில் இருந்து விலகி, இந்த நாட்டை கட்டியெழுப்பும் திறமையான வர்களிடம் நாட்டை கையளித்து விட்டு ஒதுங்க வேண்டும். சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டின் ஆட்சியாளர்கள் அதிகாரத்திலிருந்து ஒதுங்கும் வரை இலங்கைக்கு உதவ முன்வராது -என்றார். (எ-இ)



## எரிவாயு தட்டுப்பாட்டால் மண் அடுப்புகளுக்கு மவுசு

கொழும்பு, ஜூலை 5

எரிவாயு தட்டுப்பாட்டால் மண் அடுப்புக்களுக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மிகக் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்பட்ட மண் அடுப்புகளின் விலைகள் தற்போது 850 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

எனினும் தற்போது மண்அடுப்பை அதிகமானோர் கொள்வனவு செய்கின்றனர் என்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ஒ-14-இ)

### துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்

## பிரதான சந்தேகநபர் சுட்டுக் கொலை



கொழும்பு, ஜூலை 5

கொழும்பு பெஸ்டியன் மாவத்தையில் கடந்த மே மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பெம்முல்லையில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போதே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சுற்றுலாவிகள் துஷ்பிரயோகம்


கொழும்பு, ஜூலை 5

திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலூர் பகுதியில் சுற்றுலாவிகளான பெண்கள் இருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலாவெளி வேலூர் பகுதியில் உள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்த 28 வயது மற்றும் 31 வயதுடைய பெண்கள் இருவர் கடற்கரையோரமாக சென்றுள்ளனர். இதன்போது உள்வீதியூடாக வந்த இளைஞன் இரு இளம்பெண்களையும் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சஹ்ரான் என்ற இளைஞரை இது தொடர்பில் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்களும் சட்ட மருத்துவ நிபுணர் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக திருகோணமலை பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-இ)



### பொருளாதார நெருக்கடியால்

## மசாலாப் பொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 5

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சந்தையில் கறுவா, மிளகு, கராம்பு உள்ளிட்ட மசாலாப் பொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கறுவா 5 ஆயிரம் ரூபாவாகவும், மிளகு ஆயிரத்து 300 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. (ஒ-14-இ)

## நிர்வாக உத்தியோகத்தர் கொலை

கொழும்பு, ஜூலை 5

பொலநறுவை, லங்காபுர பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக்காலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

42 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## இந்தியாவிலிருந்து பால்மா இறக்குமதி செய்யத் தீர்மானம்



கொழும்பு, ஜூலை 5

இந்தியாவிலிருந்து பால்மா இறக்குமதி செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்தியாவுக்கிடையிலான தற்போதைய கடன் திட்டத்தின் கீழ் பால்மாவை இறக்குமதி செய்ய முடியும் எனவும், இது குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்குப் பங்களிக்கும் எனவும் இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதனை அத்தியாவசியத் தேவையாகக் கருதி இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும், நாட்டுக்குத் தேவையான பால் மாவை பெருமளவு இறக்குமதி செய்வதற்கும் இந்தியா ஒத்துழைப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கைக்கு உணவு பதப்படுத்துதல் மற்றும் பால் உற்பத்தித் துறைகளில் அதிக ஒத்துழைப்பை வழங்குவதற்கான விடயங்களை ஆராய இந்திய ஆய்வுக் குழுவொன்று விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் எனவும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


**நாளொரு நல்வார்த்தை**

" உங்கள் பலவீனத்தைக் குறி வைப்பவன் நண்பன் அல்ல. நண்பன் எனும் போர்வையிலிருக்கும் எதிரியே" - **சாணக்கியர்**

## தியாக நெருப்பில் குளிர்காயும் ராஜபக்சக்கள்

ஜூலை 5. தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தங்களை ஆகுதியாக்கிய தற்கொடையாளர்களை- கரும்புலிகளை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலிக்கும் நாள். இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அரச அடக்குமுறைகள் தமிழ் மக்களை ஆயுத வழியில் பயணிக்கச் செய்தது. தமிழ் மக்களின் நியாயமான கோபத்தைப் புரிந்து கொள்ளாத புரிந்து கொள்ளாததுபோன்று நடித்த பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது தங்கள் கொலைப்பசியைத் தீர்த்துக் கொண்டன.

தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி நெல்லியடியில் புதிய சகாப்தம் கப்டன் மில்லரின் தியாகத்தோடு ஆரம்பமானது. உயிரை ஆயுதமாக்கி, அடக்குமுறையாளர்களைக் கிலி கொள்ளவைக்கும் போராட்ட வடிவத்தை தமிழர்கள் கையில் எடுத்தனர். ஆனால் அவ்வாறான உயிர்க்கொடைகள், பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தப்பட்டு சர்வதேசத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டது. ஆயினும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் காவிய நாயகர்களின் நினைவுகள் ஒரு போதும் அழிந்துவிடப் போவதில்லை. இனவிடுதலைக்கான வேட்கையும் தணிந்து விடப்போவதில்லை. கட்டுக்கோப்புடன் நடந்த தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டது. அதன்பின்னர் தமிழ் மக்கள் ஆயுத ரீதியான போராட்டத்தை முன்னெடுக்கவில்லை.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைப் புறந்தள்ளி மதவாதத்தையும், இனவாதத்தையும் முன்னிறுத்தி நடத்திய போரின் விளைவுகளை இப்போது பெரும்பான்மையின மக்கள் அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இனவாதத்தைக் கக்கி அரசியல் செய்தவர்களைத் தலைக்குமேல் வைத்துக் கொண்டாடியமைக்கான பயன்களை இப்போது உணர ஆரம்பித்திருக்கின்றனர். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்த்திருந்தால் இலங்கைக்கு இப்போது இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. உயிர்வாழ்வதற்காக உலகம் முழுதும் கையேந்த வேண்டிய நிலைமையும் வந்திருக்காது.

தங்களின் அரசியல் இருப்புக்காக, தங்களின் குடும்ப வாரிசுகளின் வாழ்வுக்காக நாட்டை அடகு வைத்துக் குட்டிச்சுவராக்கிய அரசியல்வாதிகள் தங்கள் எண்ணப்போக்கில் இருந்து மீண்டு வருதாக இல்லை. அவர்களைத் தூக்கிக் கொண்டாடிய மக்கள் தூக்கிஎறிந்த பின்னரும் கூட தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள முயலவில்லை. தேவாலயங்களில் குண்டுத்தாக்குலை நடத்தி, முஸ்லிம் மக்கள் மீது பழியைச் சுமத்தி ஆட்சிக்கு வந்தவர்கள், இப்போது மக்கள் ஆதரவை இழந்திருக்கும் நிலையில், கரும்புலிகள் தினத்தில் வெடிகுண்டுத் தாக்குதல் என்ற புரளியை தெற்கில் எழுப்பியுள்ளனர்.

ஜூலை 5 அல்லது 6ஆம் திகதிகளில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என எச்சரித்து, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பொலிஸ்மா அதிபர் அனுப்பிய கடிதம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் ஊடக சந்திப்பொன்றின்போது கேள்விக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது. இப்போது அரசாங்கத்துக்கு எதிராக நடக்கும் போராட்டங்களை நசுக்க எடுக்கப்படும் சதித்திட்டம் இதுவென்றும் அவர் சந்தேகம் வெளியிட்டிருக்கின்றார்.

அநுரகுமாரவுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகம் நியாயமானதே. ஆட்சியில் உள்ளவர்களின் கடந்தகாலம் அனைவருக்குமே அந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தும். கரும்புலிகள் நாளை , வீரமறவர்களின் தியாகத்தை தமது அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்துவதில் ராஜபக்சக்கள் கைதேர்ந்தவர்கள். அண்மைய வருடங்களில் கூட, கரும்புலிகள் நாளுக்காக வெடிகுண்டு தயாரித்தார்கள், சுவரொட்டி எழுதினார்கள் என்று அப்பாவிகளைக் கைது செய்து, அதன் மூலம் மீண்டும் ஒரு புலிப்பயத்தை சிங்கள மக்களிடம் உண்டுபண்ணி, அந்தப்பயத்தை முதலீடாக்கி, தங்கள் அதிகார நாற்காலிகளை பாதுகாக்க நினைத்தவர்கள் இதே ராஜபக்சக்கள்தான். இப்போது அவர்களின் ஆட்சியதிகாரம், தொந்துபொறியில் ஈடாடுவதால், அதில் இருந்து மக்களை திசை திருப்ப, மீண்டும் கரும்புலிகள் நாள் பூச்சாண்டியை கிளப்பவோ, அல்லது ஈஸ்டர் தாக்குதல் போன்ற ஒன்றை மேற்கொள்ளவோ அவர்கள் திட்டமிட்டிருக்கலாம். புலிகள் மீதும், தமிழர்கள் மீதும் பழியைச் சுமத்தி [illegible]பாங்களை அனுபவிக்கும் அரசியல் தலைவர்களின் இழிமுக[illegible]ளை இனியாவது பெரும்பான்மையின மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறனவர்களின் கைகளுக்கு அதிகாரங்கள் செல்வதைத் தடுக்க [illegible] இல்லாவிட்டால் இந்த நாடு எத்தனை காலமானாலும் மீட்சியடையாது என்பது நிதர்சனம்.




# சர்வகட்சி அரசை அமைக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## நாடாளுமன்றத்தில் அழுத்தம்

**கொழும்பு, ஜூலை 5**

**மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று சர்வகட்சி அரசு அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் உட்பட ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, இந்த அரசு மீது உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் நம்பிக்கை இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. அவர் தேசியப் பட்டியலில் சபைக்கு வந்தவர். மக்களின் பிரச்சினைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. பிரச்சினைகளும், வரிசைகளும் நீள்கின்றன. எனவே, அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சர்வகட்சி அரசு அமைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதன்பின்னர் எழுந்த எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., விமலின் கருத்தை வரவேற்றார். மகாநாயக்க தேரர்கள் விடுத்துள்ள கோரிக்கையின் பிரகாரம் சர்வகட்சி அரசு அமையவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

எதிரணியின் மேலும் சில உறுப்பினர்களும் சர்வகட்சி அரசுக்குச் சார்பாகக் கருத்து வெளியிட்டனர்.

அதேவேளை, சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குப் பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கடந்த சனிக்கிழமை 10அம் சங்களை முன்வைத்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். (எ-22)

# இரண்டு நாள்களில் முற்றாக முடக்கம்

கொழும்பு, ஜூலை 5

இரண்டு நாள்களில் தனியார் பேருந்து சேவைகள் முழுமையாகத் தடைப்படக் கூடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 5 முதல் 10 சதவீதமான தனியார் பேருந்துகளே நேற்றுச் சேவையில் ஈடுபட்டதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் அதன் அருகிலுள்ள சில இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து டிப்போக்களில் மாத்திரம் தனியார் பேருந்துகளுக்கு நேற்றைய தினம் எரிபொருள் வழங்கப்பட்டது. அத்துடன் கொட்டாவை மாக்கும்புர பலநோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில் நேற்று சில தனியார் பேருந்துகளுக்கு டீசல் வழங்கப்பட்டது. சுமார் 3 முதல் 4 நாள்கள் வரிசையில் நின்று பேருந்து பணியாளர்கள் எரிபொருளை பெறுவதோடு சிலர் நோய் நிலைமைக்கு உள்ளாகியுள்ளதாக கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (ஒ-இ)

06.07.2022 சுபநேரம் : 04.28 - 05.58
புதன்கிழமை ராகுகாலம் 11.58 - 01.28
ஆனி 22 உதயம் ஆனி உத்தரதரிசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திரு. அனுரா அனுசாந்

(முகாமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையம் – இயக்கச்சி)

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
உன் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

உன்பிரிவில் தவிக்கும் அம்மா, அப்பா, சகோதரங்கள், மனைவி, பிள்ளை மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எங்களது ஆழ்ந்த அனுதபாங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 05.07.2022 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் வவுனியா குட்ஷெட் (Goodshed) வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் ஞானசாரியார் வீதி துன்னாலை மேற்கு கரவெட்டியில் உள்ள வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**உரிமையாளர் (அ.சாந்தருபன்), ஊழியர்கள்**
எரிபொருள் நிரப்பு நிலையம் - இயக்கச்சி
பளை, கிளிநொச்சி.

(CS 45465) (3/6)



# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24
07
1943



உதிர்வு
10
07
2016

இணுவில் மேற்கைச் சேர்ந்த

## அமரர் ஆழ்வாப்பிள்ளை சின்னாச்சி

**திதி : வளர்பிறை ஷஷ்டி (05.07.2022)**

அவர்களின் நினைவுகளுடன்
ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
அறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
உங்களின் ஆயுள் கணக்கை
மாற்றிப் போட்டிருக்கலாம் இறைவன்
மனமிரங்க மறுத்தாரோ இறைவனும்
இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்
தங்களின் ஆத்மா சாந்தி பெற்று சிவனடி சேர
சிந்தை நிறைய வேண்டி வணங்குகிறோம்
" அம்மா "

**தகவல் :**
**ஆ. சிறிதரன் (ஜேர்மனி)**

(CS 19871) (3/6)

**உங்கள் பிரிவின் துயரால் வாடும்**
**பிள்ளைகள்**



# மரண அறிவித்தல்

பிறப்பு
04
-
04
-
1940



இறப்பு
01
-
07
-
2022

## திருமதி துரைச்சாமி மங்கையர்க்கரசி

யாழ். புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, தட்டாதெருச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி மங்கையர்க்கரசி அவர்கள் கடந்த (01-07-2022 ) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மருதையானர் செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைச்சாமி அவர்களின் அன்பு மனைவியும், விக்கி னேஸ்வரி, பிரணவரூபன், தவச்செல்வி, திருவருட்செல்வி, கோணேஸ்வரி, கோகில வதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாலன், ரமணி, திகிலழகன், தயாளன், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ் சென்றவர்களான அம்பலவாணர், சின்னத்துரை, ஐயம்பிள்ளை, செல்லத்தம்பி, கணபதிப் பிள்ளை, பூரணம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர் களான அன்னம்மா, வள்ளியம்மை, சரோஜாதேவி, நவமணி துரையப்பா, பொன்னம்மா, கண்மணி, நடராஜா, சிவசாமி மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, கந்தையா, சின்னத்துரை, விசாலாட்சி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலியும், விபிஜன், விக்ஷன், சிவாஜினி, பிரதிகா, சாருஜன், பிரவீன், அருண், சிவிதா, கிசோதன், ஜெரிபிதா, ஜெரிபிகா, தபினா, நிர்மல்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,லியானா அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடு தீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வீட்டு முகவரி: இல.08,**
**தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
மகன் ரூபன் : +4748188488

(CS 54603) (3/6)


# டென்மார்க்கில் துப்பாக்கிச் சூடு மூவர் உயிரிழப்பு: பலர் காயம்

நியூயோர்க், ஜூலை 5

டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனின் தென்பகுதியில் உள்ள வணிக வளாகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவரவில்லை என்றும் கூறியுள்ளனர்.

வணிக வளாகத்துக்குள் புகுந்த துப்பாக்கிதாரி சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். வணிக வளாகத்தில் கூடியிருந்த மக்கள் சிதறி ஓடும் காட்சிகள் அந்த நாட்டு ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் டென்மார்க் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

(ஏ-இ)

# லண்டனுக்கு கடத்தப்பட்ட பழமை வாய்ந்த பைபிள்!

சென்னை, ஜூலை 5

இந்தியாவில் திருடப்பட்ட 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ் பைபிள் ஒன்று, லண்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பைபிள் தஞ்சை, சரஸ்வதி மஹாலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் 17 ஆண்டுகளுக்கு முன்னர் (2005) காணாமல் போயிருந்தது.

கிறிஸ்தவ ஆகம நூலான பைபிள் ஆங்கில மொழியிலேயே ஆரம்பத்தில் இருந்தது. இந்தியாவில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக டென்மார்க் மன்னரின் வேண்டுகோளின்படி 1709ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்த கிறிஸ்தவ மதபோதகர் பார்தோலோமாஸ் செய்ங் பாலக், தமிழ் கற்று 1714 ஆம் ஆண்டு பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார். நாகபட்டினம், தரங்கம்பாடியில் அச்சிடப்பட்ட அந்த பைபிள், அப்போதைய தஞ்சாவூர் சரபோஜி மன்னருக்குப் பரிசாக வழங்கப்பட்டிருந்தது.

இந்த பழமை வாய்ந்த பைபிள் சரஸ்வதி மஹால் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில், 2005ஆம் ஆண்டு மாயமானது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட தமிழக சிலை கடத்தல் தடுப்பு [illegible]னர், தற்போது அந்த பைபி[illegible] லண்டனில் கண்டுபிடித்து [illegible].

[illegible] திருடியவர்க[illegible] தொடர்பான [illegible]

அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

(ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருணம் பார்த்து கால் பதிக்கிறது இந்தியா

## இலங்கைக்கு வேறு தெரிவுகளும் இல்லை



'இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை, இந்தியா தனது நலன்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருவதாக எழும் குற்றச்சாட்டு, இலங்கையில் பல்வேறு தரப்பினராலும் மிகப் பெரிய அளவில் முன்வைக்கப்படுகிறது. இது எந்தளவு தூரம் உண்மை? ஏன் இந்த திடீர் சந்தேகம்?

'தவிச்ச முயலை அடிப்பது போல' இலங்கை விவகாரத்தில் இந்தியா நடந்து கொள்வதாக பலரும் இங்கே குற்றம் சாட்டுகின்றனர்.

குறிப்பாக, தற்போது நாடு இருக்கும் பொருளாதார நெருக்கடியில் இலங்கை வசமுள்ள கச்சதீவை இந்தியா கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்றும், இதுவே அதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் எனவும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்மையில் தெரிவித்திருந்த கருத்து, இத்தகைய குற்றச்சாட்டை முன்வைக்க அவர்களைத் தூண்டியிருக்கிறது.

### கிட்னியைப் பிடுங்குகிறார்கள்

'பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, நிவாரண உதவிகளை தமிழகம் வழங்கி விட்டு, கச்சதீவை கைப்பற்றிக்கொள்ள முயற்சிப்பது, பசித்த ஒருவருக்கு நிவாரணமாக மாவையும் சீனியையும் பருப்பையும் அனுப்பி விட்டு, அவரின் கிட்னியைப் பிடுங்கி எடுப்பதைப் போன்றதொரு செயலாகும்' என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் குறிப்பிடுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் உள்ளூர் தொலைக்காட்சிக்கு கருத்துத் தெரிவித்த முன்னிலை சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலர் குமார் குணரட்ணம்; 'இந்தியா மற்றும் சீனா போன்ற பிராந்திய நாடுகள், இலங்கை நெருக்கடியை தமது தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன' என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

'இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன. கடந்த மஹிந்த ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் சேர்ந்தவாறு இலங்கையின் பொருளாதாரத் திட்டங்கள் இருந்தன. தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை, தனது அரசியல் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக இந்தியா பயன்படுத்திக் கொண்டிருக்கிறது' என அவர் தெரிவித்திருந்தார்.

### காற்றாலை மின் உற்பத்தி

மன்னாரில் பூநகரியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை, இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் அழுத்தங்களைக் கொடுத்ததாக, இலங்கை மின்சார சபையின் தலைவராக இருந்த எம்.எம்.சீ. பெர்டினண்டோ அண்மையில் தெரிவித்திருந்தமையும், அதன் பின்னர் அவ்வாறு கூறியமையை அவர் மீளப் பெற்றமையும் நினைவு கொள்ளத்தக்கது.

எம்.எம்.சீ. பெர்டினண்டோ வெளியிட்ட அந்த தகவல், இலங்கை மற்றும் இந்திய அரசியலரங்கில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அவர் பதவி விலகியிருந்தார்.

மறுபுறம், கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ரா தலைமையிலான இந்திய நிதியமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவினர், இலங்கையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள வேலைத் திட்டங்களை விரைவாக செயற்படுத்துமாறு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

### இந்திய நலன்

மேற்படி இந்தியக் குழுவினர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிமசிங்க ஆகியோரை தனித்தனியாகச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வது மற்றும் மன்னார் பூநகரி பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்பதற்கான திட்டங்கள் இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், சம்பூர் அனல்மின் உற்பத்தித் திட்டம் மற்றும் திருகோணமலையில் அதிக எண்ணெய் தாங்கிகளை அமைப்பதற்கான திட்டம் ஆகியவையும் இந்தியாவுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

### தருணம் பார்த்து நுழைந்துள்ளது

இந்த நிலையில், இந்தியா மீது சுமத்தப்படும் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் ரி. பவனுடன் பிபிசி தமிழ் பேசியபோது 'ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு எந்தவித எதிர்பார்ப்புகளுமின்றி கடன்களை வழங்கி உதவிக் கொண்டிருக்க மாட்டாது. ஒவ்வொரு உதவிக்குப்பின்னாலும் பூகோள அரசியலும், பொருளாதார நலன்களும் இருக்கும்' - என்கிறார்.

'ஒரு நாட்டில் இயற்கை அனர்த்தமொன்று ஏற்படும்போது, ஏனைய நாடுகள் ஓரிரு தடவை ஏதிர்பார்ப்புகளின்றி உதவிகளை வழங்குவது வேறு விடயமாகும். ஆனால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கலின் பொருட்டு, ஏனைய நாடுகள் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கும் போது, அந்த நாடுகள் சில விடயங்களை இலங்கையிடமிருந்து எதிர்பார்க்கும்'.

'இந்தியாவைப் பொறுத்த வரையில் இலங்கை அண்டை நாடாக இருப்பதால், இலங்கைக்கு உதவ வேண்டிய தார்மீகக் கடமையொன்று உள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் வரலாற்றில் நீண்டகாலமாக தொடர்புகள் இருந்து வருகின்றன. இலங்கை - இந்[illegible] அதற்கு ஓர் உதாரணமாகும்.

'இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி, இலங்கையிலிருந்து சீனாவை வெளியே அனுப்புவதையும் இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம், முதலீடு மற்றும் வர்த்தகம் போன்ற விடயங்க ளில் இதுவரையில் சீனாதான் ஆதிக்கம் செலுத்தி வந்தது.

இந்த விடயத்தில் இந்தியா பொறுமை காத்து வந்ததோடு, அவற்றை 'நாம் அவதானித்துக் கொண்டிருக்கிறோம்' என, இந்தியா பல தடவை கூறி வந்தது. இப்போது சந்தர்ப்பம் பார்த்து இந்தியா உள்ளே வந்திருக்கிறது' எனக் கூறினார்.

'எந்தவித எதிர்ப்பார்ப்புகளுமின்றி, ஒரு நாடு நமக்கு உதவிக் கொண்டிருக்கும் என, நாமும் எதிர்பார்க்கமுடியாது. இப்போது வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் தனது காலினை இலங்கையில் பதிப்பதற்கு இந்தியா முயற்சிக்கும்.

மின் சக்தித் திட்டம், இல்மனைட் ஏற்றுமதி, கச்சதீவு விவகாரங்களில் இந்தியா உள்நுழையலாம். அதேபோன்று, மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் வளம் உள்ளதாக கூறப்படுகிறது அதிலும் இந்தியா ஆர்வம் காட்டலாம்' என பேராசிரியர் பவன் குறிப்பிட்டார்.

### முதலீட்டுக் கோரிக்கை

'இலங்கையின் எல்லாத்துறைகளிலும் ஏனைய நாடுகள் முதலீடு செய்ய முடியாது. அவ்வாறானதொரு கட்டுப்பாடு உள்ளது. உதாரணமாக தேயிலை, இரத்தினக்கல் உள்ளிட்ட சில துறைகளில் மற்றைய நாடுகள் முதலீடு செய்ய முடியாது. சுற்றுலா, ஆடை உற்பத்தி போன்ற துறைகளே முதலீடுகளுக்காக ஏனைய நாடுகளுக்கு திறந்து விடப்பட்டுள்ளன. இந்த நிலையில், இவ்வாறு கட்டுப்பாடுகள் உள்ள துறைகளில் முதலீடு செய்வதற்கான கோரிக்கைகளை இலங்கையிடம் இந்தியா முன்வைக்கக் கூடிய சாத்தியம் உள்ளது.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் அழுத்தங்களை வழங்கியதாக மின்சார சபையின் முன்னாள் தலைவர் கூறி விட்டு, பின்னர் அதனை மறுத்திருந்தாலும், தாங்கள் உதவி செய்யும் நாடொன்றுக்கு அவ்வாறான அழுத்தத்தை இந்தியா வழங்குவதற்கான சாத்தியங்கள் உள்ளதையும் மறுக்க முடியாது' எனவும் அவர் கூறினார்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















# தருணம் பார்த்து...

**கப்பல் சேவையின் பின்னணி**

இதேவேளை வடக்கிலிருந்து இந்தியாவுக்கான போக்குவரத்தை ஆரம்பிப்பதிலும் இந்தியாவின் வர்த்தக நோக்கமே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். வடக்கிலிருந்து இந்தியாவுக்கு கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக இந்தியர்கள் இங்கு வந்து வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கினால், அவர்களுடன் நம்மவர்களால் போட்டியிட முடியாமல் போகும். அதாவது இலங்கையின் உள்நாட்டுச் சந்தையை இந்தியாவுக்கு நேரடியாகத் திறந்து விடும் போது, அது இலங்கைக்கு பாதகத்தை ஏற்படுத்தும். ஆனால், வெளிநாடுகளின் முதலீடு கள் இலங்கைக்குத் தேவைதான். வெளிநாட்டு முதலீடுகளை அனுமதிக்கும்போது, அது நூறு வீதம் இலங்கைக்கு சாதமாக அமையும் என எதிர்பாக்க முடியாது. சாதகம், பாதகம் என இரண்டும் இருக்கும். அதற்குள் நாம் எவற்றைப் பெற்றுக் கொள்ளப் போகிறோம் என்பதுதான் இங்கு முக்கியமானதாகும்.

**கச்சதீவு மீட்பு**

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மீனவர்கள் போராட்டங்களை நடத்துவதைப் போல், தமிழக மீனவர்களும் இலங்கையர்களால் தடுக்கப்படுவதாகக் கூறி, உணவு தவிர்ப்புப் போராட்டங் களை மேற்கொண்டு வருகின்றனர். எனவே, தமிழக மீனவர்களுக்கு ஒரு தீர்வை, தமிழக முதல்வர் வழங்க வேண்டியுள்ளது. இல்லது ஒரு வாக்குறுதியை கொடுக்க வேண்டியுள்ளது. அதற்காகத்தான்




அவர் கச்சதீவை மீட்க வேண்டுமெனக் கூறியிருக்கின் றார்.

மன்னார் காற்றாலை மின் திட்டத்தை வழங்க திறந்த விலைமனுக் கோராமல், இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை இலங்கையில் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக மாறியுள்ளது. ஆனாலும், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், குறித்த திட்டத்துக்காக, திறந்த விலைமனுக் கோரினாலும் அதற்காக விண்ணப்பிக்க எத்தனை நிறுவனங்கள் முன்வரும் என்பதும் கேள்விக்குரியதாகும்.

வெளிநாட்டு முதலீடுகளை உள்வாங்குவதென்றால் அதற்கான சூழ்நிலை சரியாக இருக்கவேண்டும். அதாவது பேரினப் பொருளாதார குறிகாட்டிகள் நிலையான தன்மையுடையவையாக இருக்கவேண்டும். ஆனால் இலங்கையில் பணவீக்கம் உச்சமடைந்துள்ளது, எரிபொருள்கள் இல்லை, மின்சாரத் தடை உள்ளது, அரசியல் மற்றும் சமூக அமைதியின்மை காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில், இலங்கையில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டவர் எவரும் முன்வரமாட்டார்கள். எனவே, இவ்வாறானதொரு சூழ்நிலையில் அதானி நிறுவனம் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்வருகின்றமையை இலங்கைக்கு சாதகமாகவே நான் பார்க்கிறேன்' என்றும் பேராசிரியர் பவன் கூறினார்.

**வேறு தெரிவு இல்லை**

'1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டவர்கள் பலர் முன்வந்தனர். ஆனால், 83 ஜூலைக் கலவரத்தையடுத்து, அந்த முதலீட்டாளர்கள் திரும்பிச் சென்று, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் அந்த முதலீடுகளைச் செய்தனர்.

இலங்கை விவகாரத்தில் 'தவிச்ச முயலை அடிப்பது' போன்ற செயலில் இந்தியா ஈடுபட்டாலும்கூட, இப்போதுள்ள நிலையில் இந்தியாதான் இலங்கைக்குள்ள ஒரேயொரு நம்பிக்கையாகும்.

சீனாவைப் பொறுத்தவரை இலங்கை விவகாரத்தில் வர்த்தக ஈடுபட்டினையே வெளிப்படுத்தி வருகின்றது. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை விவகாரத்தில் வர்த்தக ஈடுபட்டுடன் தார்மீகத்தையும் வெளிப்படுத்தி வருகின்றது. குறிப்பாக, தமிழகத்துக்கும் இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கும் இடையில் ஓர் உறவு உள்ளது.

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த வரையில், இலங்கை விவகாரத்தில் அவர்கள் வேறொரு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றனர். எனவே, இந்தியாவை இப்போதுள்ள நிலையில் இலங்கையினால் தவிர்க்க முடியாது' என, பேராசிரியர் பவன் தெரிவித்தார்.

**இலங்கைக்கான இந்திய உதவிகள்**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து, இலங்கைக்கு இந்தியா 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவியை வழங்கியுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கடந்த வாரம் வெளிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்நியச் செலாவணிக்கு ஆதரவாக 2 பில்லியன் டொலரும், கடனுதவியாக 1.5 பில்லியன் டொலருமாக மேற்படி உதவியை இந்தியா வழங்கியுள்ளது.

மேலும் 3 பில்லியன் இலங்கை ரூபா மதிப்பிலான அரிசி, பால்மா மற்றும் மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட மனிதாபிமான நிவாரணப் பொருள்களையும் இலங்கைக்கு இந்தியா அனுப்பியது. இவை தமிழக மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் 24ஆம் திகதி இந்தப் பொருள்கள் இலங்கையை வந்தடைந்தன.

தமிழக அரசினால் வழங்கப்படும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் மருந்துப் பொருள்கள் உள்ளடங்கிய நிவாரணத்தின் இரண்டாம் கட்டமாக மேற்படி நிவாரணத்தொகுதி அமைந்திருந்ததாகவும் இந்தியத் தூதரகம் குறிப்பிட்டிருந்தது.

நன்றி - பி.பி.சி. தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா அரசால் இனியும் முடியாது

### பதவி விலகுமாறு சஜித் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 5

இந்த அரசால் இனிமேலும் தொடர்ந்து நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. எனவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு உடனடியாகப் பதவி விலகுவதைத் தவிர வேறு மாற்று வழியில்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கொடுங்கோல் அரசை அகற்றுவதற்கான மக்கள் போராட்டத்தைப் பெருமெடுப்பில் ஆரம்பிக்கவுள்ளோம். இதில் கட்சி, நிற பேதங்களை மறந்து அனைவரும் பங்கேற்க வேண்டும்.

இந்தத் தருணத்தில், நாட்டுக்கு எதிராக ஒரு கும்பலையோ அல்லது தனி நபரையோ பாதுகாப்பதை விடுத்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் தங்களை அர்ப்பணிக்குமாறு பாதுகாப்புத் தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளை 5 நாள்களிலோ அல்லது 5 மாதங்களிலோ உடனடியாகத் தீர்க்க முடியாது.

அரசின் பொய்களை நம்பி மக்கள் ஏமாறக்கூடாது. இந்நாட்டு மக்களைத் தொடர்ந்தும் யாரேனும் ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ இடமளிக்க மாட்டோம்.

இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பக் குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும். இதற்கப்பால் இந்நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனக் கூறும் பேச்சு மாயையானது -என்றார். (ஒ-22)

# பெரமுன அரசாங்கத்தை அமைக்குமாறு கோரவுள்ளோம்

## கட்சியின் செயலர் சாகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5

**சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயத்தை வலியுறுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதை தவிர்த்து மாற்றுத் திட்டங்கள் ஏதும் கிடையாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள நிலையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளை விதித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. நிபந்தனைகளை செயற்படுத்தினால் நடுத்தர மக்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள். நாணய நிதியத்தின் சாதக காரணிகளை மாத்திரம் முன்னிலைப்படுத்தும் தரப்பினர் பாதக காரணிகளை பகிரங்கப்படுத்தாமல் இருப்பது பிரதான குறைபாடாகக் காணப்படுகிறது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினோம். தற்போதைய அரசாங்கம் சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலானதா என்ற சந்தேகம் காணப்படுகிறது. சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் வழங்கிய ஆணையை பாதுகாக்க வேண்டிய பொறுப்புக் காணப்படுகிறது. தவறுகள் இடம்பெற்ற இடத்தில் இருந்து தான் அதற்குத் தீர்வு காணவேண்டும் -என்றார். (ஒ-இ)



# சீனத்தூதுவரைச் சந்தித்து விளக்கம் கொடுத்த பீரிஸ்

கொழும்பு, ஜூலை 5

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங்கை கடந்த வியாழக்கிழமை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்துள்ள எரிபொருள், உணவு மற்றும் மருந்துவ உபகரணங்களின் பற்றாக்குறை தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

'ஒரே சீனக் கொள்கை' இல் இலங்கை தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் என சீனத் தூதுவரிடம் உறுதியளித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சீனாவின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான இலங்கையின் தளராத ஆதரவை உறுதியளித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நிதி உதவி மற்றும் இலங்கையின் கடனை மறுசீரமைத்தல் (சீர்திருத்தம் செய்தல்) மற்றும் மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தூதுவருக்கு, வெளிறவுத்துறை அமைச்சர் விளக்கம் கொடுத்துள்ளார்.

சந்திப்பில் இலங்கைக்கு சாத்தியமான எல்லா வகையிலும் உதவிகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் இலங்கையுடன் தொடர்ந்தும் ஈடுபடும் என தூதுவர் குய் உறுதியளித்தார் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### எரிபொருள் தட்டுப்பாடு

# கடற்படை ரோந்து இல்லாமையால் இந்திய மீனவர்கள் வருகின்றனராம்

### சொல்கிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூலை 5

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட முடியாதுள்ளது. இந்த நிலையில் வடக்கு கடற்பரப்பை இந்திய மீனவர்கள் ஆக்கிரமிக்கின்றனர். எனவே, எமது கடல் வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

எரிபொருள் பிரச்சினையால் கடற்றொழிலாளர்களுக்குத் தமது தொழிலை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும், அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (ஒ-22)

# கோத்தாபயவுக்குத் தேரர்கள் 7ஆம் திகதிவரை காலக்கெடு

## பதவியிலிருந்து விலகாவிட்டால் பெரும் போராட்டம் என அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 5

நாட்டை மேலும் அராஜக நிலைக்கு ஆளாக்காமல் நாளைமறுதினத்துக்குள் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து தேரர்களையும் கொழும்புக்கு அழைத்து வந்து தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தேரர் அமைப்புகளின் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

தேரர்கள் அமைப்புக்களின் ஒன்றியத்தின் 11 தேரர்கள் கைச்சாத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டை தொடர்ந்து அராஜக நிலைக்குக் கொண்டு செல்லாமல் நாளைமறுதினத்துக்குள் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகவேண்டும். அவ்வாறு விலகாவிட்டால், நாட்டில் இருக்கும் அனைத்து தேரர்களையும் கொழும்புக்கு அழைத்து வந்து நாளைமறுதினத்துக்குள் தொடர் போராட்டத்தை மேற்கொள்வோம்.

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினை மற்றும் அராஜக நிலைமையை சீர் செய்வது தொடர்பாக உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் கூட்டாக கைச்சாத்திட்டு அனுப்பிய கடிதத்துக்கு ஆரோக்கியமான பதிலொன்றை அரசாங்கம் தெரிவிக்காத காரணத்தால் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றோம்.

பௌத்த மக்களின் வாக்குகளின் மூலம் அதிகாரத்துக்கு வந்து மக்களுக்கு சேவை செய்வதாக ருவன்வெலிசய புனித பூமியிலும் ஸ்ரீமஹா புத்த பெருமான் நிலை கொண்டுள்ள புனித பூமியிலும் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு ஜனாதிபதி மக்களை ஏமாற்றி இருக்கின்றார் என்பது அவர், மஹாநாயக்க தேரர்களின் கடிதத்துக்கு பதில் அளிக்காததன் மூலம் தெரியவருகின்றது.

ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்து பௌத்த தேரர்கள் உட்பட 69இலட்சம் பெரும்பான்மை மக்கள் ஜனாதிபதியை தெரிவுசெய்து கொண்ட போதும் தற்போது அந்த மக்களுக்கு ஜனாதிபதி தொடர்பாக கடுகளவேனும் நம்பிக்கை இல்லை. கோத்தாபய ராஜபக்சவைத் தொடர்ந்தும் ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ள தேரர்கள் உட்பட நாட்டு மக்கள் தயார் இல்லை.

நாடு பெரும் அழிவொன்றை காணும் நிலையில் இருக்கும்போது, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத நிலையில் 22மில்லியன் மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களின் சார்பில் நடவடிக்கை எடுக்கவேண்டியது தேரர்களின் பிரதான கடமை என்பதால் இந்தக் கோரிக்கையை விடுக்கின்றோம் -என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வட்டுக்கோட்டை – தெக்கணப்பாய்

# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய இரதோற்சவம் 05.07.2022

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதவரும் நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

**எம் பெருமான் அடியார்களே!**

இன்று (05.07.2022) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று எம்பெருமான் மாலை 4.30 மணியளவில் தேர் ஏறி வரும் காட்சியை ஆசார சீலர்களாக முழுமுதற் கடவுளாகி சிவபெருமானைத் தரிசித்து இம்மைக்கும் மறுமைக்கும் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## எம் பெருமானின் தோற்றமும் அவற்றின் சிறப்பும்





வளங்கள் நிறைந்த வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் வட்டுக்கோட்டை கிராமத்தில் தெக்கணப்பாய் பகுதியில் எம்மை கண்ணெணக் காக்கும் அம்மை. அப்பன் கண்ணகியம்மன் கண்ணலிங்கேஸ்வரர் அருள் சொல்வோம்.

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலயம் 13 ஆம் நூற்றாண்டுகாலத்தில் வழிபாட்டில் இருந்த பழமையான புனித ஆலயமாகும்.
இந்த ஆலயத்தை இந்தியாவில் இருந்து வந்து வட்டுக்கோட்டை மேற்கில் குடியேறிய இராமநாதபட்டருக்கு கண்ணகியம்மன் திருக்குறிப்புக் காட்ட அந்த இடத்தில் ஆலயம் அமைத்து வழிபடலானார. போர்த்துக் கேய நாட்டுப் படைகள் இந்து ஆலயங்களை இடித்தழித்து வந்த வேளையில் கண்ணகியம்மன் தன் உருவத்தை மாற்றம் செய்து மாதா வடிவில் காட்சியளித்ததால் இந்த ஆலயத்தை இடித்தழிக்காது விட்டுச்சென்ற பெருமை இந்த கண்ணகியம்மனுக்கு உண்டு. காலப் போக்கில் கண்ணகியம்மன் மூலஸ்தானத்தில் இலிங்கம் (கண்ணலிங்கேஸ்வரர்) பிரதிஷ்டை செய்யப் பெற்று கண்ணாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரா ஆலயமென பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2003 ஆம் ஆண்டு கண்ணகியம்மனுக்கு புதிய ஆலயம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. தற்போது தெற்கு வாசலில் சிவகாமியம்மன் வீற்றிருக்கும் காட்சியும் இடம்பெறுகின்றது.

இந்த ஆலயங்களில் கண்ணகியம்மனுக்கு பங்குனி மாத கடைசித் திங்களான **ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவமாகவும், கண்ணலிங்கேஸ்வரருக்கு ஆனி உத்திரத்தை தீர்த்த உற்சவங்களாகக் கொண்டு திருவிழாக்கள் இடம்பெற்றுவருகின்றன.**

ஒவ்வொரு பங்குனி மாத திங்கட்கிழமைகளில் பொங்கல் உற்சவம் இடம்பெற்றுவருவதுடன் ஆடிப்பூர தினத்தன்று விசேட பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த ஆலயத்தில் மூன்றுகால பூஜை இடம்பெற்று வருவதுடன். ஆடிப்பூர தினத்தன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது (1008)

ஒவ்வொரு மாத பௌர்ணமி தினத்திலும் மாலை வேளை லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை இடம்பெற்றுவருகின்றது. மிக நீண்டகாலம் தொட்டு கண்ணகியம்மன் வன்னிவாழை வெட்டவென சங்கரத்தை இலுப்பையடி வைரவர் ஆலயம் எழுந்தருளுவது வழக்கம். கார்த்திகை விளக்கீடு உற்சவம் இடம்பெற்று சுவாமி தெருவீதி வலம் வந்து வாழை வெட்டும் உற்சவம் இடமபெறும்.
ஆலய அமைவிடம் 110 பரப்பைக் கொண்ட பூமியாகும். வடக்கே ஒருபகுதி விற்பனை செய்யப்பட்டதால் தற்போது இந்த ஆலயம் 80 பரப்பு காணியாகவுள்ளது.

இந்த ஆலயத்தில் மிகவும் பழமையான வைரவர் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதுடன் புதிதாக மிகவும் அழகான மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப் பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் திருப்பணிகள் யாவும் கண்ணகியம்மனினதும் கண்ணலிங்கேஸ்வரப் பெருமானதும் திருவருளோட இடம்பெற்றுவருகின்றன. அப்பன் அம்மன் பழமைவாய்ந்த கட்டுத் தேரில் இரதோற்சவம் இடம்பெற்றது. தற்போது புதிய சித்திரத் தேர் செய்யப்பட்டு அப்பன் அம்மை எழுந்தருளுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பரிபாலனசபை, தொண்டர்சபை என இரு சபைகளும் இங்கு இயங்குகின்றன. அப்பன் அம்மை திருவருளை அனுபவித்தவன் என்ற வகையில் சொல்வதில் பெருமையடைகின்றேன்.

**“அம்மை அப்பன் அருள் மகத்தானது”**

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

**சிற்றம்பலம் ஸ்ரீஜீவா**
**உறுப்பினர் வலிமேற்கு பிரதேசசபை**
**(ஸ்ரீமுருகன்)**

## இரதோற்சவம் சிறக்க அனுசரணை


**KARAN STORES**
**கரன் ஸ்ரோர்ஸ்**
சகல விதமான பல்பொருள் மொத்த, சில்லறை விற்பனையாளர்
Moolai Road, Vaddukoddai
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை
077 651 5894,

**செல்வம் அரைக்கும் ஆலை**
சகல வகையான தானிய வகைகளும் ஈர உளுந்து, ஈர அரிசி, மிளகாய்த்தூள் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவற்றை சிறந்த முறையில் அரைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
Moolai Road, Vaddukoddai
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
சகல விதமான கட்டடப் பொருள்களையும் மற்றும் கோவில் அபிஷேகப் பொருள்களையும், கிரியைகளுக்கான பொருள்கள் அனைத்தையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்
அற்கின்சன் றோட், வட்டுக்கோட்டை

(CS 19884) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 04 - 1951



மறைவு
04 - 07 - 2022

## செல்லையா சங்கரலிங்கம்

வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம் சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் மண் கும்பானை வசிப்பிடமாகவும் தற்போது சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சங்கரலிங்கம் அவர்கள் நேற்று (04.07.2022) திங்கட்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (நயினாதீவு 5ஆம் வட்டாரம்) ராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் (மண் கும்பான்) மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரேணுகாதேவியின் (லண்டன்) அன்புக் கணவரும், தாட்சாயினி (லண்டன்), சங்கீதா (லண்டன்), சிவதர்சினி (லண்டன்), லோஜிந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருமதி குழந்தைவேலு - பூம்பாவை மற்றும் குலவீரசிங்கம் (லண்டன்), மகாதேவன் (யாழ்ப்பாணம்), முருகவேள் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு (அம்பலாங்கொட வர்த்தகர் K.K.S றான்ஸ்போட்), மகாலட்சுமி (லண்டன்) மற்றும் நாகராஜேஸ்வரி (தங்கராணி), சசிகலா, சிவபாதசுந்தரம் (லண்டன்), மலர்மணிதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**72, சீனிவாசகம் வீதி,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.** (CS 45468)(3/6)

**076 210 4345**
**077 816 6394**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# பெயர் மாற்றம்

801/5 தில்லைவயல் ஆறுகால் மடம் ஆனைக் கோட்டையில் வசிக்கும் **விஜயராசா சிந்துஜன்** ஆகிய நான் எனது பெயரை **செபஸ்டியன் விக்டர்** என பெயர் மாற்றம் செய்துள்ளளேன் இனிவரும் சகல ஆவணங் களிலும் **செபஸ்டியன் விக்டர்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 45469) (3/6) **செபஸ்டியன் விக்டர்**

எல்லை தாண்டிய மீன்பிடி


# 12 இந்திய மீனவர்கள் 8 வரையில் மறியலில்

முல்லைத்தீவு, ஜுலை 5

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழகம் காரைக்கால் பகுதியை சேர்ந்த 5 மீனவர்களும், மயிலாடுதுறையை சேர்ந்த 7 மீனவர்களும் பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அத்துமீறிமீன் பிடித்ததாக அவர்கள் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து காங்கேசன்துறை கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதையடுத்து அவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (அ-ம-26)

# மரண அறிவித்தல்



## திரு. மனோரஞ்சிதன் சிறீதரன்


யாழ்ப்பாணம் குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு கிருலப்பனையை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் தொழில் நியாயசபைத் தலைவரும் மேலதிக நீதவானுமாகிய திரு. மனோரஞ்சிதன் சிறீதரன் அவர்கள் 03-07-2022 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் 06-07-2022 அன்று காலை 8:00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1:30 மணிக்கு பொரளை பொதுமயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர் (011-2513337)

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி அகிலேஸ்வரன் (காந்தி)



**தோற்றம்:01.03.1952 மறைவு:04.07.2022**

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லத்தம்பி அகிலேஸ்வரன் (காந்தி) அவர்கள் நேற்று (04.07.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி நல்லதங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், லோகேஸ்வரியின் பாசமிகு கணவரும், விஜிதா (விஜி-யாழ்ப்பாணம்), அமல்ராஜ், சர்மிலா (சூட்டி- வட்டக்கச்சி), ராகுலன் (றோஷான், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், முல்லைத்தீவு), சௌத்திரி (பிரசன்னா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்-ICRC, வவுனியா), கஜேந்திரன் (சுமன்- லண்டன்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், மகேந்திரம், பாலசிவராம் (ஆசிரியர், கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வரி வித்தியாலயம்), சுகிர்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி. கிழக்கு பிரதேச சபை), கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் வவுனியா), யசோதரை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கமலாம்பிகை, கனகாம்பிகை, சுந்தரலிங்கம், வேதாரணியம்பிள்ளை, யோகலெட்சுமி, இராஜதுரை, ஏரம்பமூர்த்தி மற்றும் யோகாம்பிகை (அப்புத்தளை), தண்டாயுதபாணி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்-வட்டக்கச்சி), தர்மபாலசிங்கம் (கிளிநொச்சி), தர்மாம்பிகை (லண்டன்), ஜெயலெட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மதுஷன், கிந்துஷன், டர்மிகா, யுகான், தஷாங்கிதா, அட்சயன், சாத்வீகன், சுருதிகா, ஆருகன், ஆருகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2022) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**[illegible] பாண்டியன்தாழ்வு,**
**[illegible]டிக்குளி, யாழ்ப்பாணம்.**
**077 087 9488**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 19906)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீளளிக்க முயன்றால் சாகும்வரையில் போராடுவோம்

## கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் துணைத்தலைவர் ஆதங்கம்

கிளிநொச்சி, ஜூலை 5




கச்சதீவை இந்தியாவுக்கு வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால் சாகும்வரையில் போராடத் தயங்க மாட்டோம் என பூநகரி கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் துணைத்தலைவர் பிரான்சிஸ் தெரிவித்தார். கடந்த வாரம் யாழில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியில் மீனவ சமுதாயம் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றது.

இந்த நிலையில் கச்சதீவை தமக்கு வழங்க வேண்டும் எனத் தமிழ்நாட்டில் கோரிக்கை வலுப்பெறும் நிலையில் எமது அரசும் கண்டு கொள்ளாமல் இருப்பது மனவேதனையைத் தருகின்றது.

தமிழ் மக்களுடைய போராட்ட காலத்தில் ஒரு பிடி மண்ணையும் எமது கடல் வளத்தையும் யாருக்கும் வழங்குதற்கு அனுமதிக்காதவர்கள் அழிந்துவிட்டார்கள்.

ஆனால் பாது காத்து வைத்த கடல் வளமும் எமது மண்ணும் தற்போது பல்வேறு முனைகளில் பல்வேறு தரப்பினர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. எரிபொருள் நெருக்கடியால் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட மீனவர்கள் கடலுக்குச் சென்று தொழிலை மேற்கொள்ள முடியாத இக்கட்டான சூழ்நிலையில் காணப்படுகின்றார்கள்.

நாம் மட்டுமின்றி அனைத்துத் தரப்பினரும் எரிபொருள் நெருக்கடியில் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் அதை சாதகமாகப் பயன்படுத்தி கச்சதீவை இந்தியாவுக்கு வழங்க ஏதேனும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமானால் உயிர் போனாலும் போராடத் தயங்க மாட்டோம் -என்றார். (ஒ-14-20)


**Driver /வாகன சாரதி தேவை**

இடம்
யாழ்ப்பாணம் Hotel

070 721 4915, 076 870 4527

**வேலைவாய்ப்பு - Female Receptionist**

எ.எஸ்.ஆர் நொதேன் கென்சல்டன்ஸ்
தகுதி - A/L / IT & English Knowledge
வயது - 25 க்கு உள்

077 229 0303, 077 036 0555

**SHANTHIHAM**
Association for Health & Counselling

யாழ்ப்பாணம் மாவட்டததில சாநதகம உளவளத்துணை நிறுவனத்தினால் UNOPS அமைப்பின் நிதியனு சரணையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள மனநலம் மற்றும் உளவியல் ஆதரவு தலையீடுகள் மூலம் பாதிக்கப்படக்கூடிய பெண்களை வலுப்படுத்துதல் எனும் திட்டத்தில் கீழ்வரும் பதவி நிலைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக்கோவையினை 2022.07.10 ஆம் திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பதவி வெற்றிடங்கள்**

1) நிர்வாக / நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்
**(Admin / Program Coordinator) – 01**

உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் குறித்த துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா அல்லது பல்கலைக்கழக மானியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும். மற்றும் குறித்த துறைகளில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2) உளவளத்துணையாளர் (Counsellor) -03 (ஆண்/பெண்)

உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பொது நிபந்தனைகள்
- வயதெல்லை 55
- காலப்பகுதி - 6 மாதங்கள் (ஒப்பந்த அடிப்படை)

**No.8,8/1, Katpahavinayakar Lane,
Off Kachcheri Nallur Road, Jaffna.
T.P :021-222-3338
Email To - hr.shanthiham@gmail.com**

(CR 36616) (3/6)

**ஆடிச்செவ்வாய் கடை ஏலம்**

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்** ஆடிச்செவ்வாய் திருவிழாவை முன்னிட்டு கடை ஏலம் நடைபெறவுள்ளதால் எதிர்வரும் 10.07.2022 ஆம் ஆண்டு ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெறும் என்பதை அறியத்தருவதுடன் கடை ஏலம் எடுப்பவர்கள் வருகை தருமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு : கடை ஏலம் எடுப்பவர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தவும்.

தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கம் (CS 19902) (3/6) சி. கணாதரன் செயலாளர்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்**



கடந்த 15.07.2021 அன்று சிவபதமடைந்த
எங்கள் தாயார்
**அமரர்**
**நவரட்ணம் அரியமலர்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று (05.07.2021) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார். உறவினர் அனைவரும் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள்**
136, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (CS 19855) (3/6)

**மணிவிழா வாழ்த்து**




ஆசிரியை திருமதி
**புவனேஸ்வரி கணேசலிங்கம்**
SLTS-I
(B.A, Dip.in.Edu, Art Trained )

**சேவை விபரம்**
கிளி/ நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை
01.01.1996 - 23.03.1998
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்
24.03.1998 - 05.01.2000
யா/ சென்.மேரிஸ் பெண்கள் பாடசாலை ஊர்காவற்றுறை
06.01.2000 - 02.05.2004
தீவகக் கல்வி வலயம் வேலணை
03.05.2004 - 31.12.2007
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
01.01.2008 - 05.07.2022

**சேவைநலன் பாராட்டு**

சித்திரபாடம் தன்னை சிறப்புடனே கற்பித்த
சிறந்த நல்லாசிரியரே நீடூழி வாழியவே!
அம்பிகை நாமம் கொண்ட புவனேஸ்வரியே
ஆண்டவன் அருளுடன் நித்தம் வாழியவே!

துணைவர் கணேசலிங்கம் உடனே நற்பிள்ளைகளுடன்
துன்பமின்றி என்றென்றும் வாழிய வாழியவே!
சித்திரபாட ஆலோசகர், பகுதித்தலைவர், பிரதி அதிபரென
சிறப்பார்ந்த பதவிகளை அலங்கரித்தவரே வாழியவே!

தாயென மாணவருடன் பழகிடும் நல்லாசிரியரே
தன்னலமில்லா சேவை செய்த ஆசிரியரே
தரணியில் என்றும் சிறப்புடன் வாழியவே!
தனித்துவமான புகழுடன் வாழிய வாழியவே!

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/செங்குந்த இந்துக்கல்லூரி.

(CS 19903) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கே இனிமேல் எரிபொருள்!

## படைத்தரப்பு மற்றும் மாவட்டச் செயலக உத்தரவுகளைக் கேளோம் யாழ்ப்பாணம் மாவட்ட ஐ.ஓ.சி.யினர் தெரிவிப்பு

இனிவரும் காலங்களில் யாழ். மாவட்ட செயலகத்தினதும் இராணுவத்தினதும் உத்தரவுகளைக் கேட்க மாட்டோம். மக்களுக்கே எரிபொருளை விநியோகிப்போம் - என யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகிலுள்ள ஐ.ஓ.சி நிரப்பு நிலையத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் பலருக்கு இறுதி நேரத்தில் எரிபொருள் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பின்னணியிலேயே, இனிவரும் காலங்களில் யாழ். மாவட்டச் செயலகத்தினதும் இராணுவத்தினதும் உத்தரவுகளைக் கேட்கமாட்டோம். மக்களுக்கே எரிபொருளை விநியோகிப்போம் என மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-20-17)

# ஒன்றிணைந்து செயற்படாவிடின் கறுப்புச் சந்தை பூதாகரமாகும்!

## ஐ.ஓ.சி.யினருக்கு மாவட்டச் செயலர் பதில்

எரிபொருள் விநியோகத்தில் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் கறுப்புச் சந்தையைக் கட்டுப்படுத்த முடியாது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாழில் ஐ.ஓ.சி. நிறுவன முகவர், பொதுமக்களுக்கே எரிபொருளை வழங்குவோம் என ஊடக சந்திப்பு நடத்தியதாக அறிகிறேன். வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருள் வழங்க குறித்த நிறுவனம் நடவடிக்கை எடுக்குமானால் முறையான ஒரு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருளை வழங்கும்போது அருகில் உள்ளவர்கள் தொடர்ச்சியாக எரிபொருளைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும் - என்றார். (அ-ம-20-17)

---

### நாட்டை...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான 'தேசிய மறுசீரமைப்பு மற்றும் அடுத்தகட்ட பயணம்' என்ற வேலைத்திட்டத்தின் தீர்மானமிக்க கூட்டம் நேற்றுப் பிற்பகல் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 3 ஆண்டுகளில் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் மற்றவர்கள் சொல்வதைக் காதில் வாங்காமல், தாங்கள் மாத்திரம்தான் சரி என்று எண்ணிச் செயற்பட்டமையால் நாடு தற்போது பெரும் அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்குச் செல்லவேண்டும். இல்லையேல் நாடு மீளெழ முடியாதவாறு நாசமடைந்து போகும்.

சர்வாதிகாரம் இன்றி அனைவரது கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் சமூக சீர்திருத்தத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதற்காக முற்போக்குக் கட்சிகளின் முன்மொழிவுகளையும் யோசனைகளையும் செவிமடுக்கின்றோம்.

பன்முகப்படுத்தப்பட்ட திட்டங்களை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் இறுதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எதிர்க்கட்சியின் நோக்கமாகும். அந்த நிகழ்ச்சி நிரலின் ஊடாக நாட்டு மக்கள் இழந்த மூச்சை மீண்டும் வழங்க முடியும் என்ற நம்பிக்கையுள்ளது - என்றார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், க.வி.விக்னேஸ்வரன், பி. திகாம்பரம் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும், சிவில் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம-22)

### ரயில் மோதி...

போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-110)

### பொதுமக்களுக்கு...

யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஐ.ஓ.சி.யினர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் உத்தரவுகளோ அல்லது படைத்தரப்பினரின் உத்தரவுகளோ இனிவரும் காலத்தில் தம்மால் பின்பற்றப்படாது என்றும் எரிபொருள் மக்களுக்கே முழுவதுமாகப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் நேற்று நண்பகல் தெரிவித்ததை அடுத்து, இந்த யதார்த்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக நேற்று மாலை யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இராணுவத்தினர், பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர், மாவட்டச் செயலக அலுவலர்கள், ஐ.ஓ.சி.யினர் எனப் பலரின் பங்கேற்புடன் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நடைமுறையைப் பயன்படுத்தியே யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று காலை 7.30 மணியில் இருந்து எரிபொருள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த ஒரு வாரத்துக்குள் எரிபொருள் பெற்றவர்களுக்கு இன்று எரிபொருள் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக நிலவிய இந்த விநியோகப் பொறிமுறைச் சிக்கலுக்கு மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் காத்திரமான தீர்வொன்றை முன்வைத்தமை பலராலும் பாராட்டப்படுகின்றது. அதேநேரம் இந்த முடிவு அறிவிக்கப்பட்டபோது மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழுமியிருந்த பொதுமக்கள் கரவொலி எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். (அ-ம-27-17)

### போதை...

கைது செய்யப்பட்டார்.

அவருடைய உடைமையில் இருந்த போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் சந்தேகநபரை முற்படுத்தவும் சான்றுப் பொருள்களை கையளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ம-19)

### எரிபொருள்...

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எரிபொருள் கொள்வனவு மற்றும் விநியோகத்தில் நாடெங்கிலும் பெரும் குழப்பமான நிலையொன்று ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள துறைகள் தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்த விநியோகப் பாகுபாட்டுக்கு எதிராக நாடெங்கிலும் பெரும் போராட்டங்கள் வெடித்துள்ள நிலையிலேயே, எரிபொருள் கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பில் முன்னுரிமை வழங்க வேண்டிய துறைகள் தொடர்பில் அறிக்கையொன்றை வழங்குமாறு சட்டமா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### மூன்று...

எந்தவித சம்பள அதிகரிப்பையும் மேற்கொள்ளக் கூடாது என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு நிபந்தனை விதித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தில் உதவியை இலங்கை நாடியதை அடுத்து, இது தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், தனது உதவியை இலங்கை பெறவேண்டுமாயின் இலங்கை அரசாங்கம் சில நிபந்தனையைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்திவரும் நாணய நிதியம் அந்த நிபந்தனைகளின் ஒருபகுதியாகவே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

அதேநேரம் வருமான வரி வரம்பை 5 லட்சமாகக் குறைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

(அ-ம)

### இன்று....

1987ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி யாழ்ப்பாணம், வடமராட்சி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் (தற்போது நெல்லியடி மத்திய கல்லூரி) முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தின் மீது வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனத்தை மோதி, தன்னுயிரை ஆகுதியாக்கி, படை நடவடிக்கையை படுதோல்வியடையச் செய்த முதல் கரும்புலியான கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன்) நினைவாக ஒவ்வொரு வருடமும் ஜூலை 5ஆம் திகதி தமிழர் தாயகத்தில் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் கரும்புலிகள் தினமான ஜூலை 5ஆம் திகதி இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெறுவது வழக்கம். எனினும் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் அவ்வாறான எந்தவொரு தாக்குதலும் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்த நிலையிலேயே இன்று அல்லது நாளை இவ்வாறான தாக்குதலொன்றுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சர்வதேச உளவு நிறுவனங்களை கோடிட்டுக் காட்டி பாதுகாப்புச் செயலாளருக்கு பொலிஸ்மா அதிபர் அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (அ-ம)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

### தண்ணீர்...

வாளிக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்று நண்பகல் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தாயார் சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது குழந்தையைக் காணவில்லை என்று தேடியுள்ளார். அயலவர்களுக்கும் இது தொடர்பில் தகவல் வழங்கப்பட்டு அவர்களும் இணைந்து குழந்தையைத் தேடியபோது குழந்தை தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்திருந்தமை தெரியவந்தது. இதையடுத்து குழந்தை மீட்கப்பட்டு மூளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

### சுரண்டல்களின்...

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆட்சியாளர்கள் 74 ஆண்டுகளாக மக்களைத் தமது வாக்குகளுக்காகவே பாவித்தார்கள். இந்த நாட்டின் வளங்களையெல்லாம் சுரண்டினார்கள். கடைசியில் ஒரு பெரும் சுரண்டலொன்றை மேற்கொண்டு நாட்டை யாசகம் எடுக்க வைத்துவிட்டனர்.

ஆட்சியாளர்கள் மக்களை இந்த நாட்டின் குடிமக்களாகப் பார்க்கவில்லை. அவர்கள் தமக்குரிய வாக்குகளாகவே மக்களைப் பார்த்தனர் - பாவித்தனர். மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றனர். இதனால்தான் இன்று நாடு படுகுழியில் வீழ்ந்துள்ளது.

சர்வதேச் நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அண்மையில் முன்னாள் பிரதமரிடம் பல கேள்விகளைக் கேட்கவிருந்தனர். ஆனால், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதால் அவரிடம் அந்தக் கேள்விகள் கேட்கப்படவில்லை. மோசடி நிறைந்த இந்த நாட்டு அரசாங்கத்தை நம்பி எந்த நாடும் எமக்கு உதவுவதற்குத் தயாரில்லை - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சகத்திலேயே தீ விபத்து

யாழ்ப்பாணம், ஜூலை 5

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சங்கானை பகுதியில் அச்சகமொன்றில் கடந்த சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இயந்திரத்தின் வயர் ஒன்றில் ஏற்பட்ட மின்னொழுக்கே இதற்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. பணியாளர்களின் பங்களிப்புடன் உடனடியாகவே தீ அணைக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

அச்சகம் அமைந்துள்ள அதே கட்டடத் தொகுதியில் இலங்கை வங்கியின் கிளையும் அமைந்துள்ளது. வங்கிக் கிளையில் தீ விபத்து ஏற்படவில்லை என்றும் அச்சகத்திலேயே தீ விபத்து ஏற்பட்டதாகவும் மானிப்பாய் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (ஒ-இ)

# விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்க விவரங்கள் சேகரிப்பு

சாவகச்சேரி, ஜூலை 5

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்க விவசாயிகளின் விவரங்கள் அந்தந்தக் கமக்கார அமைப்புக்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பகட்டப் பணிகள் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்து வரும் நாள்களில் மழை பெய்யுமாயின் வயல்கள் உழவு வேலை மேற்கொள்ள டீசல் வேண்டும். தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டால் அந்தந்தப் பிரிவில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக விவரங்கள் திரட்டப்படுகின்றன. ஏனைய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு அடுத்த கட்டத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

# மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் பசுமாடு ஒன்றை சட்டவிரோதமாக இறைச்சியாக்கிய நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் 30 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 35 கிலோகிராம் இறைச்சி கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,23)




# யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தெரிவு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் நேற்று இடம்பெற்றது.

நலச்சேவைகள் கிளை உதவிப்பதிவாளர் ஜங்கரன் மற்றும் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் ராஜயமேஷ் தலைமையில் இடம்பெற்ற தெரிவில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக கலைப்பீட மாணவர் அ.விஜயகுமார், செயலாளராக விஞ்ஞானபீட மாணவர் எஸ்.ராவீன், பொருளாளராக முகாமைத்துவபீட மாணவர் எஸ்.சேந்தன் ஆகியோரும் ஏனைய உறுப்பினர்கள் ஒவ்வொரு பீடத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-14,125)

# தங்கத்துடன் இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 5

19 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களுடன் இந்தியப் பிரஜைகள் இருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர் என்று சுங்கப்பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களிடமிருந்து 8.5 கிலோகிராம் தங்கம், 75 ஆயிரம் அமெரிக்க டொலர் மற்றும் 19 ஆயிரம் யூரோ என்பன கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-14,இ)

# எருக்கலம்பால் விழுந்ததால் பெண்ணின் கண்பார்வை பாதிப்பு

சாவகச்சேரி ஜூலை 5

குடும்பப்பெண் ஒருவரின் கண்ணுக்குள் எருக்கலம்பால் விழுந்ததால் அவர் பார்வை இழக்கும் நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த சோகேஸ்வரன் நாகராணி (வயது52) என்ற குடும்பப்பெண், சதுர்த்திப் பூசைக்கு வெள்ளை எருக்கலைப்பூ பறிக்கும் போது பூவிலிருந்து பால் கண்ணுக்குள் விழுந்துள்ளது.

எனினும், அதைப் பொருட்படுத்தாது வழிபாடு முடித்து வீடு திரும்பும் போது அவருக்குக் கண் பார்வை தெரியாத நிலை காணப்பட்டது.

அதனையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஒ-14-9)

# வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வருக்கு இன்று தேர்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு புதிதாக வடிவமைக்கப்பட்டு கடந்த சித்திரை மாதத்தில் வெள்ளோட்டம் நடைபெற்ற சித்திரத் தேரில் கண்ணலிங்கேஸ்வரப் பெருமான் கண்ணகாம்பிகா சமேதராக ஆரோகணித்து வீதி வலம் வரவுள்ளார்.

(ஆலய தேர்த் திருவிழா சிறப்பிதழ் உள்ளே)

# மோ.சைக்கிள் – பேருந்து விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 5

மோட்டார் சைக்கிள் - பேருந்து விபத்தில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து மீசாலைச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மீசாலையில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற பிள்ளையை ஏற்றிக்கொண்டு வீதியைக் கடந்த மோட்டார் சைக்கிளை அரச பேருந்து மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தங்கராசா நாகேந்திரராசா (வயது 70), நாகேஸ்வரன் அபிசா (வயது15) என்ற இருவருமே காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஒ-14-9)



தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ சங்கத்தில், 100 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராசா கூட்டுறவுக் கொடியினை ஏற்றி வைத்தார். (ய-159)



பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் 6 ஆசிரியைகளுக்கு பாடசாலை சமூகத்தால் பிரிவுபசார விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.